பதிவு எண்: ம. 6311 ★ தொலைபேசி: 51331 ★ தோற்றம்: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 20] சென்னை: ஐப்பசி 29 (14—11—72) செவ்வாய் வெளியூர்: ஐப்பசி 30 (15—11—72) புதன் [இதழ்: 125

சேரிப் பகுதிகள் [illegible]
அரசே மேற்கொள்[illegible]

பூனா, நவ. 14[illegible]

"மகாராட்டிரம் முழுவதிலு[illegible]முள்ள சேரிப் பகுதிகளை அரசே மேற்கொள்ளுவதற்கான அவசரச் சட்டம் ஒன்று விரைவில் பிறப்பிக்கப்படும்"

என்று செய்தி[illegible] சமூக நலத் [illegible] அமைச்சர் தெரிவித்தார்.

இதற்கான சட்டம், விரைவில் சட்டமன்றத்தில் கொண்டுவர[illegible]படும்.

அரசியல் மோசக்காரர் கபட நாடகம்

அராஜகத்தின் மூலம் ஆட்சியை அகற்றிவிடலாம் என்ற நம்பிக்கை

அமைதி குலைவுக்குச் சிறிதும் இடந்தரோம்— எந்தத் தியாகத்துக்கும் தயாராக இருக்கிறோம்

சட்டமன்ற தி.மு.க.—தோழமைக் கட்சிகளின் சூளுரைப் பிரகடனம்

சட்டமன்ற தி. மு. க. கட்சிக் கூட்டம், நேற்றிரவு அரசினர் தோட்டத்திலுள்ள சட்டமன்ற தி. மு. க. கட்சி அலுவலகத்தில்—கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் தி. மு. க. தோழமைக் கட்சியினராக முஸ்லிம் லீக்—பார்வர்டு பிளாக்—தமிழரசுக் கழகம் ஆகிய கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

கூட்ட முடிவில் எடுக்கப்பட்ட முடிவுகளை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நிருபர்களிடம் தெரிவித்தார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களாவன:—

"தமிழ்நாடு சட்டப் பேரவையை உடனடியாகக் கூட்டவேண்டும் என்று சில எதிர்க்கட்சிகள் அறிக்கைகள் விடுத்ததும் சனநாயக முறைக்கு ஏற்ப பிரச்சினைகளை விவாதிக்கத் தமிழகச் சட்டப் பேரவைக் கூட்டப்பட்டதும் தமிழக மக்கள் அறிந்ததே ஆகும்; ஆனால் அதற்குப்பின் இன்று விளைந்த நிகழ்ச்சிகளுக்காக இந்தக் கூட்டம் தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. இன்றையத் தினம் சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தைக்கூட ஒத்தி வைத்துவிட்டு, அமைச்சரவை மீது எதிர்க் கட்சியினர் கொண்டுவந்த கண்டனத் தீர்மானத்தை எடுத்து விவாதிப்பதற்கு முதல்வர் சபையில் ஒப்புதல் அளித்த பிறகும், சில எதிர்க் கட்சியினர் சனநாயக முறைப்படி பிரச்சினையை அணுகத் தயங்கியது கண்டு இக்கூட்டம் தனது வியப்பைத் தெரிவித்துக் கொள்கிறது.

செய்திகளைப் பரப்புவதன் மூலமும் மாற்றிவிடலாம் என்ற நினைப்புடன் வன்முறைகளில் ஈடுபட்டும்—வன்முறைச் செயல்களைத் தூண்டிவிட்டும் செயல்படுகின்ற ஒரு சில எதிர்க் கட்சிகளின் தகாத போக்கினை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

அமைதி காக்கத் துணை நிற்பீர்!

வன்முறை வெறியாட்டங்களைத் தூண்டிவிட்டு—அந்தக் குழப்பச் சூழ்நிலையைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளத் திட்டமிடும் அரசியல் மோசக்காரர்களின் கபட நாடகத்தில் சிக்கிப் பலியாகாமல்—தமிழகத்தில் தொடர்ந்து அமைதியைப் பாதுகாக்கத் துணை நிற்க வேண்டும் என்று தொழிலாளர்களையும்—மாணவர்களையும்—விவசாயிகளையும்—வணிகர்களையும்—பொதுமக்களையும் இக்கூட்டம் வேண்டிக் கேட்டுக் கொள்கிறது.

எந்தவிதமான தியாகத்துக்கும் தயார்

எத்தகைய நெருக்கடிகளை உருவாக்கி சட்டம்—ஒழுங்கு—அமைதியைக் குலைக்க வன்முறையாளர்கள் முயன்றாலும், அதனை உறுதியோடு நின்று அமைதியான முறையில் சமாளிக்க [illegible]ந்தத் தியாகத்திற்கும் தயாரா[illegible] இருக்கிறோம் என்ற சூளுரையைத் தோழமைக் கட்சி உறுப்பினர்களும்—ஆளும் கட்சி உறுப்பினர்களும் மேற்கொள்கிறோம் என்பதையும் இக்கூட்டம் பிரகடனப்படுத்துகிறது.

வானொலியின் விஷமம்

தமிழ்நாட்டில் உள்ள அனைத்திந்திய வானொலி நிலையம், இன்றைய தி. மு. க. அமைச்சரவைக்கும்—தோழமைக் கட்சிகளுக்கும் விரோதமான செய்திகளை வேண்டுமென்றே திரித்துக் கூறுவதிலும்—பெரிதுபடுத்துவதிலும்—சட்டப் பேரவை நிகழ்ச்சிகளிலேகூடத் தி. மு. க. தோழமைக் கட்சி உறுப்பினர்களின் பெயர்களை இயன்றவரை இருட்டடிப்புச் செய்வதிலும் முனைந்து செயலாற்றுவதை இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது."

அராஜகத்துக்குத் தூண்டுகோல்

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழக அரசைக் கலவரங்களின் மூலமும்—அராஜகங்களின் மூலமும்—பீதிதரும்

மறுக்கப்படும் மனித உரிமை

திருவனந்தபுரம், நவ. 14—

"எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும்—மனிதர்களாகப் பிறந்த அனைவரையும் இந்துக்களின் கோயில்களில் அனுமதிக்க வேண்டும்"

என்று கேரளப் போலீசுத் துறை அமைச்சர் கே. கே. விசுவநாதன், திருவாங்கூர் ஆலய நுழைவுப் பிரகடனத்தின் 36-வது ஆண்டுவிழாவில் பேசுகையில் வற்புறுத்தினர்.

'சனநாயக விரோதியே— இராஜிநாமா செய்'

கே. ஏ. மதியழகனுக்கு 182 எம். எல். ஏ.-க்கள் கடிதம்

சென்னை, நவ. 14—

"சனநாயகப் பாரம்பரியத்துக்கு விரோதமாகவும் தேர்ந்தெடுத்த உறுப்பினர்களின் நம்பிக்கை வீணாகும் வண்ணமும் நடந்துகொண்டதால் அவைத் தலைவர் பதவியிலிருந்து விலகிவிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, திரு. கே. ஏ. மதியழகன் அவர்களுக்குக் கடிதம் எழுதத் தமிழகச் சட்டமன்ற உறுப்பினர்கள் 182 பேர் முடிவு செய்துள்ளனர்"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தெரிவித்தார்; 'மேலவை நீங்கலாகச் சட்டப் பேரவையில் உறுப்பினர்களாக உள்ள எல்லா அமைச்சர்களும்—தி. மு. கழகம், முஸ்லிம் லீக், பார்வர்டு பிளாக், தமிழரசுக் கழகம் ஆகிய கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களுமாக மொத்தம் 182 பேர் இதில் கையெழுத்திட்டுள்ளனர்.

'நெல்லிக்குப்பம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.கிருஷ்ணமூர்த்தி இந்தக் கூட்டத்தில் எடுத்துச் சொன்ன கருத்தையொட்டி, இந்தக் கடிதம் அனுப்பப்படுகிறது; அக்கடிதம் திரு. கே. ஏ. மதியழகனுக்கு உடனடியாக அனுப்பிவைக்கப்படும்' என்றும் அவர் தெரிவித்தார்.

திரு. கே. ஏ. மதியழகனுக்கு எழுதப்பட்டிருக்கும் கடிதத்தின் வாசகம் வருமாறு:—

"நாங்கள் எல்லாம் தங்களிடம் முழு நம்பிக்கை வைத்து ஒருமனதாகப் பேரவைத் தலைவராகத் தங்களைத் தேர்ந்தெடுத்தோம்.

தாங்கள் நம்பிக்கை வீணாகும் வண்ணம் அண்மைக் காலத்தில், சனநாயகப் பாரம்பரியத்திற்கு விரோதமாகத் தாங்கள் நடந்துகொண்டது கண்டு வருந்துகிறோம்.

தங்கள்மீது நம்பிக்கை இழந்துவிட்டோம்; ஆகவே, தாங்கள் சட்டப் பேரவைத் தலைவர் பதவியிலிருந்து விலகிக் கொள்ள வேண்டும் என்று இதன்மூலம் கேட்டுக் கொள்கிறோம்."

'கதாநாயகர்'களின் வெற்றி பவனி

"சபைப் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டவுடன், சபாநாயகர் மதியழகனும்—எம்.ஜி. இராமச்சந்திரனும் ஒரேகாரில் கோட்டையிலிருந்து புறப்பட்டனர்."

—செய்தி (13—1—72)

சபாநாயகர்தானே இன்றைய கதாநாயகர்—புதிய அரசியல் கதாநாயகர் அவருடன் சேர்ந்து சென்றதில் வியப்பு என்ன?

சேர வேண்டியவர்கள் சேர்ந்து விட்டார்கள்! எப்போதோ நடந்திருக்க வேண்டியது இப்போது நடந்திருக்கிறது!

சேர்ந்து தீட்டிய சதித் திட்டம் வெற்றி பெற்றுவிட்டதைக் கொண்டாடிக் களிக்க வேண்டாமா?- விருந்து'க்குச் சென்றிருக்கக்கூடும்!

அது என்ன விருந்து—யாருக்கு யார் கொடுத்தது—எங்கே அது நடந்தது—என்றெல்லாம் கேட்டுவிடாதீர்கள்!

அந்த விவரமும் அடுத்தும் பத்திரிகைகளில் வெளிவரத்தான் போகிறது!

முன்பே எடுத்த முடிவு— அறிவிப்புதான் தாமதம்

செய்தியாளர்:—"நாஞ்சில் மனோகரன் புதிய கட்சியில் சேர்ந்துவிட்டது பற்றி உங்கள் கருத்து என்ன?"

முதலமைச்சர்:—"முடிவு முன்பே எடுத்ததுதான்; அறிவிப்புத்தான் தாமதமாக வந்தது."

காட்டுமிராண்டி நாட்டிலா வாழ்கிறோம்?

சென்னை, நவ. 14—

"ஒரு கட்சி, தேர்தலில் முறையாக வெற்றிபெற்றுத் தமிழ்நாட்டில் ஆளும் பொறுப்பை ஏற்று நிர்வகித்து வருகிறது, இந்த ஆட்சியும்—நிர்வாகமும் சரியில்லை என்றால், அதை மாற்றியமைக்கும் பொறுப்பு மக்கள் கையில் இருக்கிறது; அதற்காகத்தான் ஐந்து ஆண்டுக்கு ஒருமுறை தேர்தல் நடக்கிறது.

இடையில் கல் எறிதல்—கலவரங்கள் செய்தல்—பஸ்களைக் கொளுத்துதல்—மாணவர்களைத் தூண்டுவிடுதல் மூலம் ஓர் இயக்கத்தை—ஒரு சிறந்த ஆட்சியைக் கவிழ்த்துவிட எண்ணுவது முன் மாதிரியாகிவிடக்கூடாது!

'கற்களை வீசுவதுதான் ஆட்சி மாற்றத்துக்கு வழி என்றால், தேர்தலே தேவையில்லை! ஓட்டுகளை எண்ணிப் பார்க்காமல், இவ்வளவு கற்கள் வீசப்பட்டன' என்பதை எண்ணி முடிவு சொல்லலாம்.

இதே முறையை எல்லாக் கட்சிகளும் பின்பற்றத் தொடங்கிவிட்டால், தமிழ்நாடு இரணகளமாகிவிடும்! நாம் எல்லாம் காட்டுமிராண்டி நாட்டில் வாழ்பவர்களாகி விடுவோம்."

— முதலமைச்சர் கலைஞர்

(மேலவையில் ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது அளித்த பதிலில்)

சட்ட மன்றத்தைத் தள்ளி வைப்பதில்
அவைத் தலைவருக்கு உள்ள வரம்பு--சட்ட நிபுணர்கள் கருத்து

சென்னை, நவ 14—

"சட்டமன்றத்தின் பெரும்பான்மை உறுப்பினர்கள், அவை ஒத்தி...ப்படுவதை விரும்புகிறார்களா, இல்லையா என்பதை அறிந்துகொள்ளாமல் அவைத் தலைவர், அவையை ஒத்திவைக்கும் செயல் அரசியல் குழப்பம் அல்லது மற்ற காரணங்களின் விளைவாக இதுவரை நேரடியாகக் கண்டனம் செய்யப்படாமல் இருந்திருக்கலாம்! ஆனால், அவைத் தலைவரின் அத்தகைய செயல் 'சரியானது' என்று அது எந்தவிதத்திலும் காட்டுவதாக ஆகாது"!

என்று சட்ட வல்லுநர் ஒருவர் கருத்தறிவித்திருக்கிறார்; தமிழ்நாடு சட்டப் பேரவையை, அவைத் தலைவர் கே. ஏ. மதியழகன், டிசம்பர் 5-ந் தேதிக்கு ஒத்திவைத்திருப்பது பற்றிக் கருத்தறிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்; இதன் தொடர்பாக மேலும் அவர் கூறியிருப்பதாவது:—

இந்திய அரசியல் சட்டத்தின் 174(2)-வது விதியின்படி, சட்ட மன்றக் கூட்டத் தொடரை முடிவுக்குக் கொண்டுவந்ததாகக் கவர்னர் அறிவிக்கலாம்.

கவர்னர் 174(2)-வது விதியின்கீழ், சட்டமன்றக் கூட்டத் தொடரை முடிவுக்குக் கொண்டுவந்ததாக அறிவிப்பு செய்துவிட்டு -- பின்னர், 174(1)-வது விதியின்கீழ் சட்டமன்றக் கூட்டத் தொடரைக் கூட்டலாம்.

சட்டமன்றத்தில் உள்ள பெரும்பாலான உறுப்பினர்கள், அவையை ஒத்திவைப்பதை ஆதரிக்கிறார்களா என்பதை அறிந்துகொள்ளாமல் சட்டமன்றத்தைக் கால வரம்பின்றியோ அல்லது ஒரு குறிப்பிட்ட தேதிக்கோ அவைத் தலைவர் ஒத்திவைக்கும் செயல் முறையானதா என்பது பற்றிக் கடுமையான சந்தேகம் எழுகிறது.

சட்டமன்றத்தில் உள்ள கட்சிகள் அல்லது குழுக்களுக்கு இடையே அவைத் தலைவர், நடுநிலையாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறவர்; 'எந்த ஒரு கட்சி அல்லது குழுவுக்கும் ஆதரவாகவோ அல்லது சாதகமாகவோ அவர் இருக்கக் கூடாது' என்றும் எதிர்பார்க்கப்படுபவர்.

'சட்டமன்றத்தை ஒத்திவைக்கலாமா' என்ற பிரச்சினையில், அவையில் பெரும்பான்மையினரின் கருத்துடன் செயல்படுத்தப்பட வேண்டும்.

போட்டியாட்சி அரசு முறையின்கீழ் அமைச்சரவைக்கு, அவையின் பெரும்பான்மை ஆதரவு இல்லாமல் போனாலன்றி, அமைச்சரவையின் விருப்பத்திற்கு மாறாக அவையை ஒத்திவைக்க முடியாது.

'எதிர்க் கட்சிகளின் பணி எதிர்ப்பதுதான்' வால்டர் பேஜ்ஹாட் கூறினார்; எதிர்க் கட்சிகள், அரசை எதிர்க்கலாம்; அதற்காகத் தங்களது விருப்பப்படி எந்த வழியையும் அவை பின்பற்றலாம்; ஆனால், அவைத் தலைவர் இவற்றுக்கு அப்பாற்பட்டவராக இருக்க வேண்டும்.

சட்டமன்றத்தில் அமைச்சரவைக்குப் பெரும்பான்மை ஆதரவு இல்லை என்று ஓர் உறுப்பினர் கருதினால், அவையில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவருவதன் மூலம் அதை அவர் பரிட்சிக்கலாம்.

நிலவரம் தெளிவாக இல்லை என்றால், அது பற்றியும் அவையில் வாக்கெடுப்பு மூலமாகத்தான் முடிவு செய்ய வேண்டும்; நீதிமன்றத்தில் வாதியும்--பிரதிவாதியும் ஓர் உடன்பாட்டுக்கு வருவதற்காக வழக்கு ஒத்திவைக்கப்படுவதைப்போல், உறுப்பினர்கள் சிந்திப்பதற்காக அவகாசம் அளிக்கும் வகையில், அவைத் தலைவர் சட்டமன்றத்தை ஒத்திவைப்பதன் மூலம் அதை (நிலவரம் தெளிவாக இல்லை என்றால் அதைப்பற்றி) முடிவு செய்ய முடியாது.

தற்போதைய பிரச்சினையில், தமிழ்நாடு சட்டமன்...வை அவைத்...லைவரால் டிசம்பர் 5-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது; அவைத் தலைவரின் இந்தச் செயல் தடைசெய்யப்படாவிட்டால், அவை மீண்டும் சனவரி 5-ந் தேதிக்கும், அதற்குப் பிறகு பிப்ரவரி 5-ந் தேதிக்கும் ஒத்திவைக்கப்படுவதைத் தவிர்க்க இயலாமல் போய்விடலாம்.

இந்த விவகாரத்தில், சட்டமன்றத்தின் உரிமை -- அதாவது பெரும்பான்மையினரின் உரிமை மீறப்படுகிறது.

நீதிமன்றத்தில் அவமதிப்பு சம்பந்தமான விதிமுறைகள் சட்டமாகத் தொகுக்கப்பட்டிருக்கின்றன; ஆனால், சட்டமன்ற உரிமை பற்றிய விதிமுறைகள் சட்டமாக இயற்றப்படவில்லை.

[உரிமைப் பிரச்சினை பற்றி சட்டமன்றத்தில் வாக்கெடுப்பு மூலமாகத்தான் நிர்ணயிக்க முடியும் என்பது தெளிவு]

ஒத்திவைப்புப் பிரச்சினை குறித்துச் சட்டமன்றத்தில் பெரும்பான்மையினரின் கருத்து அறியப்படவில்லை; அது என்னவென்று தெரியாது -- என்ற அடிப்படையில்தான் இந்த விமர்சனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெரும்பான்மையினர் அவை ஒத்திவைக்கப்படுவதை ஆதரிக்கிறார்கள் என்றால், விவகாரம் அத்துடன் முடிவு பெறுகிறது; ஆனால், பெரும்பான்மையினரின் விருப்பத்தை அறிந்துகொள்ளாமல் இவ்வாறு ஒத்திவைக்கும் நடவடிக்கையை அவைத் தலைவர் மேற்கொள்ளக்கூடாது; இந்த நிலையை சம்பந்தப்பட்ட அனைவரும் விரைவில் ஒப்புக்கொண்டால், தூய அரசியலுக்கு வழி வகுக்கப்பட்டுவிடும்."

அவையை மீண்டும் தேதி குறிப்பிட்டோ அல்லது காலவரம்பின்றியே ஒத்திவைக்கலாம்.

அவைத் தலைவர் பதவியிலிருந்து அவரை அகற்றுவதற்கான ஒரு தீர்மானம் சட்டமன்றத்தில் விவாதிக்கப்படுகின்றபோதுதான் அவர் தமது பதவியிலிருந்து விலக வேண்டும்.

"சட்டமன்றத்தைத் தேதி குறிப்பிடாமல் அவைத் தலைவர் ஒத்திவைக்கவில்லை; எனவே, தற்போதைய கட்டத்தில் கவர்னர் தலையிட முடியாது என்று சில சட்ட நிபுணர்கள் கருதுகிறார்கள்."

தேதி குறிப்பிடாமல் சட்டமன்றத்தை அவைத் தலைவர் ஒத்திவைத்தால், கவர்னர் சட்டமன்றக் கூட்டத் தொடரை முடிவுக்குக் கொண்டுவந்ததாக அறிவித்து--பின்னர் கூட்டலாம்.

"இப்போது கவர்னர் அத்தகைய நடவடிக்கையை மேற்கொள்ள முடியாது" என்று இந்த நிபுணர்கள் கருதுகிறார்கள்; டிசம்பர் 5-ந் தேதிக்கு (அதாவது தேதி குறிப்பிட்டு) சட்டமன்றத்தை, அவைத் தலைவர் ஒத்திவைத்திருப்பதை அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

ஆளுநரின் நிலை என்ன?

சென்னையிலுள்ள அரசியல் சட்ட நிபுணர்கள் சிலர், இதன் தொடர்பாகக் கருத்தறிவிக்கையில், 'பஞ்சாப் மாநிலத்தில் 1968-ம் ஆண்டில் நடந்ததை, இப்போது தமிழ்நாட்டில் நடக்கும் நிகழ்ச்சியுடன் ஒப்பிட முடியாது' என்று குறிப்பிட்டிருக்கின்றனர்; 'அப்போது பஞ்சாப் சட்டமன்றத்தை அவைத் தலைவர் ஒத்திவைத்த பிறகு, மாநில வரவு -- செலவுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காகக் கவர்னர் சட்டமன்றக் கூட்டத் தொடரை முடிவுக்கு கொண்டு வந்ததாக அறிவித்து -- பின்னர், சட்டமன்ற கூட்டத் தொடரைக் கூட்டினார்; தமிழ்நாடு சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில் அத்தகைய நிலை ஏதும் இல்லை' என்று அந்த நிபுணர்கள் கூறுகின்றனர்.

அந்தச் சட்ட நிபுணர்கள்மேலும் கூறியிருப்பதாவது:—

"அவைத் தலைவருக்குத் அரசியல் சட்டப்படி உள்ள பொறுப்புகளிலிருந்து தந்திரமாகத் தப்பித்துக்கொள்ளவேண்டும் என்றோ-- அல்லது அவைத் தலைவர் பதவியிலிருந்து தம்மை அகற்றுவதற்கான முயற்சிகளை தாமதப்படுத்தவேண்டும் என்றோ விரும்பியதன் விளைவாக அவைத் தலைவர் இவ்வாறு நடந்து கொண்டார் என்று கவர்னர் கருதினால்தான், சட்டமன்றத்தை மீண்டும் கூட்டுமாறு கவர்னர் உத்தரவிட முடியும்.

அவ்வாறு கவர்னர் கருதி -- சட்டமன்றத்தை மீண்டும் கூட்டுமாறு உத்தரவிட்டாலும், மீண்டும் கூட்டப்படும் சட்டமன்றத்துக்குத் தலைமை வகித்து நடத்த உரிமையுள்ள அவைத் தலைவர், இப்போது மேற்கொண்ட நடவடிக்கையை அப்போதும் மேற்கொள்ளலாம்; அதாவது,

தில்லை வில்லாளன் உடல்நிலை

சிதம்பரம், நவ. 13 -

நாடாளுமன்ற மேலவை தி. மு. க. குழுத் தலைவர் தில்லை வில்லாளன், இன்று, துவங்கும் நாடாளுமன்றத் தொடர்கூட்டத்தில் கலந்துகொள்ள இயலாத அளவுக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டுள்ளார்.

சென்ற வாரம், டில்லி செல்ல சென்னை சென்றபொழுது, 'புளு' என்னும் கடும் காய்ச்சலால் தாக்கப்பட்டு -- சென்னையிலேயே தங்க வைக்கப்பட்டு -- டாக்டர் பால கிருஷ்ணா அவர்களால் சிகிச்சை செய்யப்பட்டு -- அவர் அனுமதியின் பேரில் தற்பொழுது சிதம்பரத்தில் தங்கியுள்ளார்.

காய்ச்சல் -- மார்புச் சளியினால் இன்னமும் தொந்தரவு இருந்து வருவதாலும், குளிர் மிகுந்த இந்த நாட்களில் டில்லி செல்லக்கூடாது என்று மருத்துவர் கண்டிப்பான கட்டளையிட்டிருப்பதாலும் தாம் வர இயலாததை விளக்கி, மேலவைத் தலைவர் ஜி. எஸ். பதக் அவர்களுக்கு அவர் கடிதம் எழுதியுள்ளார்.

முன்னேற்றச் சங்க வெற்றி
கோரிக்கை ஏற்கப்பட்டதால் வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது

தென் ஆற்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சியில் உள்ள ஆற்காடு பஞ்சாலையில் 300-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றி வருகிறார்கள்; அங்கு வேலை நீக்கம் செய்யப்பட்ட ஒரு தொழிலாளியின் பிரச்சினை உள்ளிட்டு பல்வேறு பொதுக் கோரிக்கைகளை முன்வைத்து, ஆற்காடு பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் வேலைநிறுத்த அறிக்கையினைக் கொடுத்திருந்தது.

கோரிக்கைகள் முடிவு பெறாவிட்டால், 15—11—72 முதல் கால வரையறையின்றி வேலை நிறுத்தம் நடத்துவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த வேலைநிறுத்த நோட்டீசு மீதான பேச்சுவார்த்தை நிர்வாகத்தினருக்கும் -- ஆற்காடு பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தினருக்குமிடையே நடைபெற்றது; இந்தப் பேச்சுவார்த்தையில் தொழிலாளர்கள் சார்பில் பேரவைப் ...துச் செயலாளர் காட்டூர் கோபா...-- சங்க நிர்வாகிகளும், அதிபர்கள் சார்பில் நிர்வாக இயக்குநர் இராமாச்சாரி -- ஆலைச் செயலாளர் சுரேந்திரன் -- மேலாளர் அண்ணாமலை ஆகியவர்களும் பங்கு கொண்டனர்.

36 கோரிக்கைகளை முன்வைத்து நடத்த இருந்த இந்த வேலை நிறுத்தம் தவிர்க்கப்படுகின்ற வகையில் அனைத்தும் பிரச்சினைகளிலேயும் இரு தரப்பினரும் சுமுகமான பேச்சுவார்த்தை நடத்தி உடன்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் 15—11—72-ம் நாளன்று நடத்துவதாக இருந்த வேலை நிறுத்தம் கைவிடப்பட்டு உள்ளது.

தொழிலாளர்கள் கோரிக்கையில் வெற்றி காணப்பட்டுள்ளது.

முசிறி வட்ட தி.மு.க.
புதுக் கட்சியின் போக்குக்குக் கண்டனம்

முசிறி வட்ட தி. மு. கழகப் பிரதிநிதிகள் கூட்டம் 9—11—72 அன்று அவைத் தலைவர் அரு. ஆதிமூலம் தலைமையிலும் -- மாவட்டச் செயலாளர் எம். எஸ். வெங்கடாசலம் முன்னிலையிலும் நடைபெற்றது.

தலைவரும்-தோழர்கள் க.இராசு, கி சினிவாசன், அ.சலியபெருமாள், மு. பழனியப்பன், கி. பசவலிங்கம், தே. பொன்னுசாமி, மா. நடராசன், எஸ. கே. வடிவேலு எம்.எல்.ஏ, பி. எஸ். முத்துச்செல்வன் எம்.எல்.ஏ.; அ. துரைராசு எம்.பி, (வட்டச் செயலாளர்), மாவட்டச் செயலாளர் எம். எஸ். வெங்கடாசலம் ஆகியோரும், அண்மையில் நடைபெற்ற தலைமைக் கழகச் செயற்குழு -- பொதுக்குழுத் தீர்மானங்களை விளக்கிப் பேசி, கழகத்தையும் -- கலைஞர் அவர்களின் தலைமையில் நடைபெற்று வருகின்ற கழக அரசையும் மேலும் வலிவுடனும் -- பொலிவுடனும் வளர்க்க வேண்டிய அவசியம் குறித்தும் எடுத்துச் சொன்ன பிறகு கீழ்க்காணும் தீர்மானங்கள் அனைவராலும் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன:—

"தலைமைக் கழக முன்னாள் பொருளாளர் எம். ஜி. இராமச்சந்திரன், கழகக் கட்டுப்பாட்டை மீறிச் செயல்பட்டதன் தொடர்பாக அவரைக் கட்சியிலிருந்து நீக்கித் தலைமைக் கழகம் எடுத்துள்ள நடவடிக்கையை இக்கூட்டம் ஒருமனதாக வரவேற்கிறது.

திரு. எம். ஜி. இராமச்சந்திரன் புதிதாகத் துவக்கியுள்ள தனது கட்சிக்கு அண்ணா அவர்களின் பெயரையும் -- கட்சிக் கொடியில அண்ணா அவர்களின் உருவத்தையும், பயன்படுத்துவதையும் இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது."

காலித்தனத்துக்கு வித்தூன்றும் டில்லி அமைச்சர்கள்
'கலவரத்தால் கழக அரசைக் கவிழ்த்துவிடலாம்' எனக்கனவு
கெட்டிக்காரத்தனத்தால் நிலைமையைச் சமாளித்துவிட்டார் கலைஞர்

கவலைப்படும் நிலைமையில்லை -- அமைதி காப்பீர் -- தமிழ்நாட்டு மக்களுக்குத் தந்தை பெரியார் தரும் செய்தி

சென்னை, நவ. 14—

"நாட்டிலே கலவரம் நடக்கவேண்டும் – அடக்குமுறை ஏற்பட வேண்டும் – யாராவது சாகும் நிலைமையை உருவாக்க வேண்டும் – அதை மத்திய அரசாங்கத்துக்குச் சொல்லி இந்த அரசாங்கத்தைக் கலைக்கச் சொல்ல வேண்டும் என்று நினைக்கிறார்கள்.

மத்திய அரசிலிருந்து வருகின்ற அமைச்சர்களும் இங்கே இருக்கின்றவர்களுக்கு நாக்கில் நீர் ஊறுகின்ற மாதிரி பேசிவிட்டுப் போகிறார்கள்; இது, காலித்தனம் செய்ய நினைக்கின்றவர்களுக்கு ஊக்கமாகிவிட்டது! ஆனால் முதலமைச்சர் கலைஞர் கெட்டிக்காரத்தனமாக இதையெல்லாம் சமாளித்துவிட்டார்! இதற்குமேல் அவர்கள் ஒன்றும் செய்ய முடியவில்லை!

"கல்லெறிந்தார்கள் – பஸ்களைக் கொளுத்தினார்கள் – அரசுக்கு ரூ 20 இலட்சத்திற்குமேல் நட்டத்தை உருவாக்கினார்கள்.

"இத்தனைக்குப் பிறகும் மத்திய அரசிலுள்ளவர்கள் 'நாங்கள் இந்தப் பிரச்சினையில் தலையிடமாட்டோம்' என்று சொல்லிவிட்டார்கள்! இனிமேல் இவர்களுக்கு இப்படியெல்லாம் செய்ய தைரியம் ஏற்படாது"

என்று தந்தை பெரியார் அவர்கள், சென்னை 79-வது வட்ட தி மு.க. சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டித் தெரிவித்தார்.

சென்னை 79-வது வட்ட தி மு.க. சார்பில் லாயிட்ஸ் சாலையில் தோழர் மணியரசு தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

தோழர்கள் கே. பார்த்தசாரதி வேணுகோபால், கே. சுப்பிரமணி, மதிதாசன், எஸ். ஏ. டி. அன்சாரி, வைரக்கண்ணு, ந. சுப்பிரமணி, எஸ். ஏ. எம். உசேன், அ. ஜார்ஜ், முத்துராமலிங்கம். அரங்கநாதன் எம்.சி, 'விடுதலை' கி. வீரமணி, அமைச்சர்கள் எஸ். ஜே. சாதிக் பாட்சா, க. இராசாராம், சத்தியவாணிமுத்து ஆகியோர் பேசினர்.

இறுதியில் தந்தை பெரியார் பேசுகையில் கூறியதாவது:—

"ஊர்வலம் நடத்தினார்கள் -- என்ன சாதித்து விட்டார்கள்? என்னதான் கணக்குப் போட்டுப் பார்த்தாலும், 15,000—20,000-த்திற்குமேல் இருக்காது; அதைப் பட்டம் வேறு போட்டுக் காட்டிக் கொண்டிருக்கின்றனர்!

'தமிழ்நாட்டில் கலவரம்' என்கிறார்கள்; ஆனால், இந்திரா காங்கிரசு ஆளுகின்ற பஞ்சாபில் — கேரளத்தில் — மத்தியப் பிரதேசத்தில் — மகாராட்டிரத்தில் — அசாமில் — கருநாடகத்தில், நம் மாநிலத்தைவிட அதிகக் கலவரம் நடக்கவில்லையா?

ஏதோ -- மத்திய அரசு போலீசு இங்கே வந்திருப்பதைப் பெரிதாகச் சொல்லுகிறார்கள்; ஆனால் மற்ற மாநிலத்தில் இராணுவத்தையே தருவித்திருக்கிறார்களே!

தமிழ்நாட்டில் கலவரம் செய்கின்றவர்கள் எதிர்க்கட்சிக்காரர்கள் தானே தவிர, பொதுமக்கள் இந்தக் கலவரத்தில் கலந்து கொள்ளவில்லை! இந்தக் கலவரங்களால் இந்த அரசாங்கத்தைக் கலைக்க முடியாது!

பிறகு வேறு என்ன வழி? -- இன்னும் மூன்றரை ஆண்டுகள் இருக்கின்றன; தேர்தல் வரும்; அப்போது மக்கள் தீர்ப்புக்கு விட்டுவிட வேண்டியதுதான்!

இப்போது கத்தியதும்—ரகளை நடத்தியதும்தான் மிச்சம்!

நாம் கவலைப்படும் நிலைமை இல்லை; அதனால் அடாகமாக இருக்க வேண்டும்; காலித்தனம் செய்கிறவர்களை மக்கள் புரிந்து கொள்வார்கள்!

இந்தக் கழகம் என்ன குற்றம் செய்தது -- என்ன கொள்கையிலே மாறுதல் ஏற்பட்டுவிட்டது--ஒன்றுமே இல்லையே!

இந்த ஆட்சி வந்த பிறகுதான் எல்லாத் துறைகளிலும் நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன; கல்வித்துறையிலும்— மின்சாரத் துறையிலும் — உத்தியோகத்திலும் நல்ல முன்னேற்றம் உருவாக்கியிருக்கிறது!

எதிரிகளுக்கு இருக்கின்ற ஆத்திரமெல்லாம், நம் சமுதாயம் முன்னேறிவிடுகிறதே என்பதுதான்!

இப்படிப்பட்ட ஆட்சியை மாற்றிவிட்டால் பிறகு சமுதாயத்தில் பெரிய மாற்றங்களைச் செய்ய வேறு எந்தக் கட்சி இருக்கிறது?

காமராசர் வந்தால், 'சாதியை ஒழிப்பேன்' என்று சொல்லுவாரா?

நம்முடைய இந்த அரசாங்கம் மக்களுக்கு தண்ணீர் வசதி—மின்சார வசதி—கல்வி வசதி தருகிறது; முன்பிருந்ததைவிட வசதிகள் பெருகியிருக்கின்றன! நம் மக்களுக்கு என்னென்ன தேவையோ அவைகளெல்லாம் தண்ணீர்பட்டபாடாய் கிடைக்கிறது.

'தமிழன்' என்ற உணர்ச்சியோடு இப்படிப்பட்ட காரியங்கள் நடக்கின்றன!

கடந்த தேர்தல் நேரத்தில் 'ஊழல் -- ஊழல்' என்று சொன்னார்களே -- அதைத்தான் இப்போதும் சொல்கிறார்கள்!

நாட்டில் கொள்கை இல்லாத கட்சி கம்யூனிஸ்டுக் கட்சிதான்; எங்கேயாவது சண்டை என்றால் வந்துவிடுவார்கள். இதுதான் அவர்களுக்கு வேலை!

இந்தக் கம்யூனிஸ்டுகள் தி. மு. கழக ஆதரவில்தான் சில இடங்களில் வந்தார்கள்; இவர்களால் அடுத்து வர முடியுமா -- வர முடியாது; ஆகவே, யார் வந்தாலும் -- கிளர்ச்சி செய்தாலும் இவர்களும் சேர்ந்து கொண்டு கலவரம் செய்கிறார்கள்!

ஒரு காசு மின்சாரக் கட்டண உயர்வுக்காக விவசாயக் கலவரம் செய்தார்கள்; ரகளை நடந்தது; அது ஒழிந்தது என்றால் இப்போது இந்தக் காரியத்திலும் ஈடுபடுகிறார்கள்!

இது அரசியல் போராட்டமல்ல-- தோற்றுப்போனவர்கள் -- பதவிக்கு வரமுடியாதவர்கள் செய்கின்ற கலவரம்!

தோற்றவர்கள் --- ஜெயித்தவர்களைப் பார்த்து குற்றம் சொல்லுகிறார்கள்; இதிலே பொதுமக்கள் சிக்கிக்கொள்ளக்கூடாது.

கலகத்தையே இலட்சியமாகக் கொண்டிருக்கிறார்களே தவிர, அவர்கள் கட்சிக்குக் கொள்கையே இல்லை; புத்திசாலிகளாக இருக்கிறவர்கள் இவர்களுக்கு இடம் தரக்கூடாது; இதெல்லாம் பத்திரிகைக்காரர்களுக்குவேடிக்கையாகத்தான் இருக்கும்!

ஆகவே, நமது நன்மையை முன்னிட்டு -- சமுதாயத்தின் நன்மையை முன்னிட்டு இந்த ஆட்சி நிலைக்கப் பாடுபட வேண்டும்!

இவர்களை நம்பி எத்தச் சிறிய காரியம் செய்தாலும் அது நம்முடைய சமூதாயத்தைத்தான் பாதிக்கும் என்பதை உணர வேண்டும்.

காலித்தனத்தால் நம்மை அழிக்க நினைக்கிறவர்களை எதிர்த்து நாம் ஒற்றுமையாக இருக்கவேண்டும் -- ஏமாந்துவிடக் கூடாது!

தன்னையே விலை கூறுவோர் கயவர்
தனக்குப் பின்னர்தான் கட்சி என்பவர் வீழ்வார்
வள்ளுவர் வாக்கு --- நாவலர் விளக்கம்

சென்னை, நவ, 13—

"அண்ணா அவர்கள் தந்த கொடி -- கொள்கை நம்முடன்தான் இருக்கிறது; வேறு சிலர் இன்று அதற்கு உரிமை கொண்டாடினாலும், நம்மிலிருந்து பிரிந்தபோதே அவைகளைத் துறந்தவர்களாவர்!

'எற்றற்குரியர் கயவர் ஒன்று உற்றக்கால் -- விற்றற்குரியர் விரைந்து' என்றார் வள்ளுவர்; 'தனக்குத் தன்பமேன்றுச், தன்னையே எதிரிகளிடம் விற்றுவிடவும் துணிபவர்கள் கயவர்கள்' என்று நாம்கூட சொல்லத் தேவையில்லை -- வள்ளுவர் அன்றே சொல்லி விட்டார்!

'நான்தான் கழகம்' என்கிறார்கள்! கழகத்தை முன்நிறுத்தித் தன்னைப் பின்நிறுத்திக் கொள்வாரே வாழ்வார்— தன்னை முன்நிறுத்திக் கழகத்தைப் பின்நிறுத்துவோர் நிச்சயம் வீழ்வார்!

தேள்--தானே போய் மற்றவர்களைக் கொட்டும்; பசு மாடு நாம் தருகிற தீனிக்கேற்ப நமக்குப் பால் தந்து உதவும்; மயில்--கேட்டால் இறகு போடாது; பிடுங்க வேண்டும்; சந்தனக்கட்டை தான் தேய்ந்தாலும் சரி என்று மற்றவர்களுக்கு மணம் கொடுக்கும்; இப்படிப்பட்ட மனிதர்களும் உண்டு; அவர்களில் சந்தனக் கட்டை போன்றவர் என். வி. நடராசன் அவர்களை வாழ்த்துவது, நல்ல உள்ளத்தை -- தூய தொண்டினை வாழ்த்துவதாகும்."

---அமைச்சர் நாவலர்
(என். வி. என். மணிவிழா)

தமிழ்ச் சமுதாயத்தை ஏமாற்றியவன் வாழ்ந்ததில்லை
புதிய வரலாற்றை யாராலும் படைத்துவிட முடியாது
ஆட்சியைக் கவிழ்க்க அலாவுதீன் அதிசய விளக்கா வைத்திருக்கின்றனர்?

சவால் வீரர்களுக்கு பார்வர்டு கட்சித் தலைவர் ஏ. ஆர். பெருமாள் விடுக்கும் அறைகூவல்

சென்னை, நவ. 13—

"சனநாயகத்தில், அமைச்சர்கள்மீது குற்றச்சாட்டு சொல்வது தவறல்ல; ஆனால் ஆதாரபூர்வமாக அந்தக் குற்றச்சாட்டுக்கள் இருக்கவேண்டும்.

கலைஞர் அவர்கள் இன்று தமிழக முதல்வராக இருக்கிறார் -- நாலரைக் கோடி தமிழ் மக்களின் தலைமகனாக இருக்கிறார் என்றால், அவரைப் பற்றி எப்படிப் பேசவேண்டும்? பேசுகின்றவர்கள் ஒழுங்காகப் பேசுகிறார்களா -- உண்மையைப் பேசுகிறார்களா என்பதை உணர்ந்து பார்க்கவேண்டும்.

தமிழ்ச் சமுதாயத்தை ஏமாற்றியவன் வாழ்ந்தது கிடையாது! இதிலே எவனும் புதிய வரலாற்றைப் படைத்துவிட முடியாது. அப்படிப்பட்டவர்களின் முகமூடி மிக விரைவில் கிழிக்கப்படும்.

கட்சியைப் பற்றித் தரக்குறைவாகப் பேசும் ஒருவரை எந்தக் கட்சியாவது சும்மா விட்டிருக்கிறதா?

'ஆட்சியைவிட்டுக் கழகத்தை இறக்கிவிடுவோம்' என்கிறார்களே -- இது என்ன அலாவுதீன் அதிசய விளக்கா -- தேய்த்தால் பூதம் வந்து இமயமலையில் இருக்கின்ற பத்ரிநாத் கோயிலை கன்னியாகுமரியில் கொண்டுவந்து வைத்துவிடுவதுபோல மாற்றி விடுவதற்கு? இங்கே இருக்கின்ற மற்ற நாட்டுக்காரன் இதையெல்லாம் பார்த்தால் என்ன நினைப்பான்?

ஒரு சிலர் இந்தக் கட்சியைவிட்டுப் போய்விடுவதால் ஆட்சியைக் கவிழ்த்துவிட முடியாது; அங்கிருந்து சிலர் போனாலும், பார்வர்டு பிளாக் கட்சி -- முஸ்லிம் லீக் -- தமிழரசுக் கழகம் -- கழக ஆதரவு சுயேச்சைகள் இருக்கிறார்கள்.

உயிர் மூச்சுள்ள வரையில், முதலமைச்சர் கலைஞரின் தலைமையிலுள்ள தி. மு. கழகத்திற்கும் -- பார்வர்டு பிளாக் கட்சிக்கும் இடையிலுள்ள உறவைப் பிரிக்க முடியாது!

கலகம் செய்து இந்த ஆட்சியைக் கவிழ்ப்பது என்றால், அதே வேலையைச் செய்து உங்கள் ஆட்சியைக் கவிழ்க்க முடியாதா?

ஒரு சாதாரண எம்.எல்.ஏ.-யும் -- ஒரு எம்.பி.யும் போய் குடியரசுத் தலைவரிடம் மனுக் கொடுத்து உடனே நடவடிக்கை எடுப்பது என்றால், எங்கள் பக்கத்திலே எத்தனை எம்.எல்.ஏ., எம். பி.-க்கள் இருக்கிறார்கள் -- எங்களால் அப்படித் தர முடியாதா?

கட்சியைப் பிடிக்கவில்லை என்றால் இராஜினாமா செய்துவிட்டுத் தனிக் கட்சி அமைத்து -- கொடியைப் போட்டு -- கொள்கையை விளக்கி -- கட்சிக்குப் பலத்தைத் திரட்டி -- தேர்தலில் நின்று வெற்றி பெற்று அமைச்சர்கள் ஆகலாம்; அதையெல்லாம் விட்டுவிட்டு மற்றவர்கள் செய்ததையே இவரும் ('புரட்சித் தலைவர்') செய்ய நினைக்கிறார்!

பல ரிகார்டுகளை எரித்தவர்கள் இங்கே இல்லை -- புதிய புதிய சாதனை ரிகார்டுகளை உருவாக்கியவர்கள்தான் இருக்கிறார்கள்!

புதிய புதிய திட்டங்களைத் தீட்டும் இந்த அரசுக்கு எதிராகக் குழப்படி செய்கிறார்கள். இது தர்மமா -- நியாயமா -- கலைஞர் கருணாநிதியை ஒழிப்பதுதான் கொள்கையா?

'அண்ணாவின் கொள்கையே எனது கொள்கை என்கிறார்களே -- அண்ணாவின் தலையாய கொள்கை -- அவர் தந்த உயில் -- சாசனம் -- மாநில சுயாட்சி; அந்தக் கொள்கைக்காகப் போராட நாளையே புதுக் கட்சித் தலைவர் தயாரா? இதற்காக இரயில் முன் மறியல் செய்ய -- அஞ்சல் அலுவலகங்கள் முன் மறியல் செய்யத் தயாரா?"

—(என். வி. என். மணி விழாவில்)

நீலகிரி மாவட்டச் செயல்வீரர் கூட்டம்
தலைமைக் கழக முடிவுக்கு வரவேற்பு

உதகை, நவ. 6—

நீலகிரி மாவட்ட தி.மு.க. செயல் வீரர்கள் கூட்டம், கூட்டுறவு வங்கிக் கட்டடத்தில் மாவட்டச் செயலாளர் கே. பி. முருகேசன் தலைமையில் நடைபெற்றது

உதகை வட்டக் கழக செயலாளர்கள் -- உறுப்பினர்கள், உதகை நகர தி. மு. க. பொது உறுப்பினர்கள் -- கூடலூர் தி. மு. க. தோழர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சென்னையில் கூடிய தி. மு. க. செயற்குழு -- பொதுக்குழு தீர்மானங்களை விளக்கி மாவட்ட செயலாளர் கே. பி. முருகேசன் பேசிய பிறகு உதகை வட்ட தி. மு. க. செயலாளர் ஆர். இராசு, தொட்டக்கம்பை தி. மு. க. செயலாளர் பேம்பன் குணசேகரன், சிறப்பு அழைப்பின் பேரில் கலந்து கொண்ட தமிழரசு செயலாளர் ந. திருமலை ஆகியோர் கழக வளர்ச்சி பற்றிப் பேசினர்.

செயற்குழு -- பொதுக்குழு எடுத்த முடிவை ஒருமனதாக ஏற்று, எம். ஜி. ஆரைக் கழகத்திலிருந்து விலக்கியதை ஒருமனதாக ஏற்றுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நகர தி. மு. க. செயலாளர் பி. செயராமன் நன்றி கூறினார்.

ஆசிரியருக்கு மடல்

கழகத் தலைமையின் பாராட்டுக்குரிய முடிவு

ஐயா,

கழகத்திலிருந்து பிரிந்து செல்ல முன்கூட்டியே திட்டமிட்ட எம் ஜி. ஆர், கழகத்தினுடைய மூலமந்திரமான கட்டுப்பாட்டை மீறினர்.

அது மட்டுமல்லாது, பேரறிஞர் பெருந்தகை அண்ணா வளர்த்த கழகத்தை -- அவர்தம் ஆட்சியைக் குறைகூறி, மாற்றானுக்குக் காட்டிக் கொடுத்த கடைநிலை கண்டு உடனடி நடவடிக்கை விரைந்தெடுக்கத் தூண்டி முன்னறிக்கை தந்த செயற்குழு வீரர்கள் 26 பேரும் பாராட்டிற்குரியவர்கள்.

அந்த சனநாயக அறிக்கையை ஆய்ந்து உடன் எடுத்த நடவடிக்கை போற்றி வரவேற்கப்பட வேண்டிய ஒன்று.

கழகத் தலைமையையும்--பொதுச் செயலாளரையும் மனமாரப் பாராட்டுகிறோம்.

இல. செல்வராசன்
செயலாளர்,
பம்பாய் – பொய்சர்
தி.மு.க. கிளை

பொய்ச் செய்திக்கு மறுப்பு

கட்டிமேடு தி. மு. கழகத்திலிருந்து 70 பேர் விலகித் துரோகியின் கட்சியில் சேர்ந்திருப்பதாக 'தின மலர்' (வெளியூர் 10-11-72) ஏட்டில் அப்பட்டமான புளுகு செய்தி ஒன்று வெளியாகி இருக்கிறது.

"ஒரு நபரைத் தவிர வேறு யாரும் விலகவில்லை; அக்கட்சியில் சிண்டிகேட்டர்களும் -- சினிமா ரசிகர்களும்தான் சேர்ந்துள்ளனர்" என்று வட்டப் பிரதிநிதி அ. ப. முகம்மது அறிவிக்கிறார்.

கட்டிமேடு தி. மு. க.
எம்.ஜி.ஆர். ரசிகர் மன்றத்தைக் கலைக்க முடிவு

திருத்துறைப்பூண்டி வட்டம் தி. மு. க. கட்டிமேடு பொது உறுப்பினர் கூட்டம், 20—10—72-ல் அவைத் தலைவர் சு. சிவானந்தம் தலைமையில் நடைபெற்றது; அதுபோது, சென்னையில் நடைபெற்ற தி. மு. க. பொதுக்குழு -- செயற்குழு தீர்மானங்களை முழு மனதுடன் ஏற்றுக்கொள்வதுடன், இதுவரையில், 'எம். ஜி. ஆர். ரசிகர் மன்றம்' என இயங்கிவந்த வந்த அமைப்பை மேற்படி மன்றத் தலைவர் அ. சபாபதி -- துணைத் தலைவர் கே. எஸ். மீரா உசேன் முன்மொழிந்தும் வழிமொழிந்தும் மேற்படி மன்றத்தைக் கலைத்துவிட்டு அதற்குப் பதிலாக 'அண்ணா பகுத்தறிவு மன்றம்' அமைப்பதெனவும், தலைமைக் கழகம் எடுக்கும் முடிவுகளின்படி செயல்படுவதெனவும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

செயலாளர் மு. அப்துல் ரகீம், வட்டப் பிரதிநிதி அ ப முகம்மது, துணைச் செயலாளர் ஜி எஸ். மூர்த்தி மற்றும் பலர் விளக்க உரையாற்றினர்.

துரோகியின் பெயர் நீக்கப்பட்டது
பம்பாய்த் தோழர்கள் முடிவு

பம்பாய் -- பொய்சரின், 'எம். ஜி. ஆர். மன்றம்' என்ற பெயரில் இயங்கிவந்த மன்றம், 'அண்ணா நினைவு மன்றம், எனப் பெயர் மாற்றப்பட்டது.

மன்றம் பொறுப்பாளர் இல. செல்வராசன் அறிவிப்பதாவது:—

"எம்.ஜி.ஆர். செய்த அரசியல் மோசடி கண்டு மனம் நொந்து -- இதுகாறும் அவர் பெயரில் மன்றம் வைத்திருந்தமைக்கு வருந்தி -- இனிமேலும் அவர் பெயரில் மன்றம் வைத்துச் செயல்படுவதை அவமானமெனக் கருதி -- நம்மை ஆளாக்கி அரசியல் விழிப்புணர்ச்சியூட்டிய அறிஞர் அண்ணா அவர்களின் பெயரில், 'அண்ணா நினைவு மன்றம்' என்ற பெயரில் செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்."

திண்டுக்கல் வட்டத் தோழர்களுக்கு:

"திண்டுக்கல் வட்ட தி. மு. க. செயலாளர் மு. காதர்சா, தொண்டையில் (டான்சில்ஸ்) அறுவைச் சிகிச்சைக்காகத் திண்டுக்கல் மாவட்டத் தலைமை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்; 15—11—72 அன்று அறுவைச் சிகிச்சை நடைபெறும்; ஆகவே, கழகம் பணிகளை முன்னிட்டு அவரைச் சந்திக்க விரும்பும் தோழர்கள், வட்டத் துணைச் செயலாளர் ம. காத்தமுத்து அல்லது வட்ட அவைத் தலைவர் அ. திருமூர்த்தி அவர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்" என்று அவைத் தலைவர் திருமூர்த்தி அறிவிக்கிறார்.

கலைக் குழு முகவரி

மதுரை தங்கராசு குழுவினரின் 'அரசியல் கோமாளி' எனும் புதிய ... நிகழ்ச்சியை நடத்த விரும்பு...ோர் தொடர்பு கொள்க:—

...பா. தங்கராசு,
... பூசாரிதோப்பு தெரு,
...ரை—9

‘விபரீதம் ஏதும் நடந்துவிடவில்லை’

‘மக்கள் வீண் குழப்பமடைய வேண்டாம்’

[illegible]ளுநரைச் சந்தித்த பின்னர் முதலமைச்சர் தந்த செய்தி

அரசியல் ரீதியாக எதிர்க் கட்சிக்காரர்களின் குழப்ப வாதம் -- சட்டரீதியாக எடுக்க வேண்டிய நடவடிக்கை பற்றி ஆய்வு

சென்னை, நவ. 14—

முதலமைச்சர் கலைஞர் அவர்கள், நேற்று தமிழ்நாடு ஆளுநர் கே. கே. ஷாவைச் சந்தித்து நிலவரங்களை எடுத்துரைத்தார்.

அவருடன், கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் சட்ட அமைச்சர் செ. மாதவன் இருவரும் சென்றனர்.

ஆளுநரைச் சந்தித்தபின், முதலமைச்சரைச் செய்தியாளர்கள் சந்தித்தனர்.

"சட்டமன்றக் கூட்டம் விரைவில் நடக்குமா ?" என்று கேட்கப்பட்டபோது முதலமைச்சர் கூறியதாவது :—

"சட்டப் பேரவை ஒத்திவைக்கப்பட்டுள்ளது ; அமைச்சரவை அப்படியே இருக்கிறது ; சட்டப் பேரவை ஒத்திவைப்பினாலேயே ஏதோ விபரீதம் நடந்துவிட்டதாகப் பொதுமக்கள் யாரும் குழப்பமடையத் தேவையில்லை."

செய்தியாளர் :— "அரசியல் ரீதியாக இப்போது உள்ள நிலை என்ன ?"

முதலமைச்சர் :— "'அரசியல் ரீதியாகக் கருணாநிதி பதவியை இராஜினாமாச் செய்யவேண்டும்' என்றனர் ; பின்னர், 'கருணாநிதியும் சில அமைச்சர்களும் இராஜினாமா செய்ய வேண்டும்' என்று கோரினர் ; பிறகு, 'கருணாநிதி அமைச்சரவை முழுவதும் இராஜினாமா செய்துவிட்டு வேறு சில இளைஞர்கள் அமைச்சர்களாக வரவேண்டும்' என்றார்கள் ; இன்றைக்கு மொத்தமாக, 'சட்டமன்றத்தைக் கலைத்துவிட்டு மறுதேர்தல் நடத்த வேண்டும்' என்று சொல்லிவிட்டார்கள். கம்யூனிஸ்டுக் கட்சியினரும் -- புதிய கட்சியினரும் அமைச்சரவை மாற்றம் -- சட்டமன்றம் கலைப்பு ஆகியவைகளைப் பற்றி இந்த ஒரு வார காலத்திற்குள் எத்தனை கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள் என்பதைக் கடந்த ஒரு வார பத்திரிகையைத் திரும்பப் படிப்பவர்களுக்கு நன்றாகத் தெரியும்."

செய்தியாளர் :— "அரசியல் சட்ட ரீதியாக அடுத்த நடவடிக்கை என்ன ?"

முதலமைச்சர் :— "சட்ட ரீதியானவைதைத்தான் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம்."

மக்கள் வேறு-- உறுப்பினர் வேறு?

"இது மக்கள் இயக்கமாக -- மக்கள் கட்சியாக இருக்கிறது ; பெரும் அளவில் உறுப்பினர்களைச் சேர்க்க முயற்சி எடுக்க வேண்டும்."

புதுக் கட்சித் தலைமை நிலையத்தில் ஊழியர்கள் கூட்டம் நடந்ததாம். அந்தக் கூட்டத்தில ஊழியர்களைப் பார்த்து, 'அடுத்து ஆட்சிக்கு வரப்போவது நமது கட்சிதான்' என்று கூறிவிட்டு தொடர்ந்து பேசுகையில் மேற்கண்டவாறு புரட்சித் தலைவர் கேட்டுக் கொண்டாராம் !

கட்சியே மக்கள் கட்சியாகிவிட்ட பிறகு, உறுப்பினர்களை ஏன் சேர்க்க வேண்டும் -- மக்கள் எல்லோரும் கட்சி உறுப்பினர்கள்தானே !

சட்டமன்றத்தில் இரங்கல்

சென்னை, நவ. 13—

1962 முதல் 1971-வரை தமிழகச் சட்டப் பேரவை உறுப்பினராகவும், 1971 முதல் நாடாளுமன்ற மக்களவை உறுப்பினராகவும் இருந்த திரு. மா. இராசாங்கம் மறைவெய்தியது குறித்து இரங்கல் தெரிவிக்கும் வகையில், இன்று தமிழகச் சட்டப் பேரவையில அனைவரும் 2 நிமிட நேரம் அமைதியாக எழுந்து நின்று தங்கள் அஞ்சலியைச் செலுத்தினர்.

எகிப்துக்கு ஏவுகணைகள்

எகிப்துக்கு மீண்டும் இரஷ்யா அளித்தது?

நிபுணர்களும் வருகை?

வாஷிங்டன், நவ. 13—

தரையிலிருந்து வானத்துக்குச் சென்று தாக்கும் 60 ஏவுகணைகளை எகிப்துக்கு இரஷ்யா அளித்திருப்பதாகவும் -- அவற்றில் சில கெய்ரோவின் பாதுகாப்புக்கு வைக்கப்பட்டிருப்பதாகவும் அமெரிக்கப் பத்திரிகைகள் கூறின.

'எஸ். ஏ.-6' என்ற அந்த ஏவுகணை, இரஷ்யாவிடம் உள்ள மிக நவீன ஆயுதமாகும் ; 100 அடி முதல் 50,000 அடி உயரம் வரையில் உள்ள இலக்குகளை அது தாக்கவல்லது.

அந்த ஏவுகணைகளை பயன்படுத்தும் விதத்தையும் — பராமரிப்பையும் எகிப்தியருக்குக் கற்றுக்கொடுக்க நூற்றுக்கணக்கான தொழில் நுட்ப ஆலோசகர்களையும், நிபுணர்களையும் இரஷ்யர்கள் அனுப்பியுள்ளனர்.

அதிபர் சதாத் வெளியேற்றுவதற்கு முன்பு எகிப்தில் 15,000 முதல் 20,000 இரஷ்ய இராணுவ ஆலோசகர்கள் -- தொழில் நுட்ப நிபுணர்கள் இருந்தனர் ; வெளியேற்றத்துக்குப் பிறகு 200 முதல் 300 பேராகக் குறைந்தனர் ; அவர்களை மீண்டும் அழைக்க அதிபர் சதாத் முடிவு செய்த பிறகு இப்பொழுது 500 முதல் 1000 இரஷ்யர்கள் உள்ளனர்.

துபாய் நாடு மூலம் பாகிஸ்தானுக்குக் கிடைத்த புதிய போர் விமானங்கள்

பயன்படும் நிலைமை ?

வாஷிங்டன், நவ. 13—

"பிரான்சிடமிருந்து 'அபு துபாய்' என்ற பெட்ரோல் எண்ணெய் வளமிக்க நாடு வாங்கிய 12 'மிராஜ் ஜெட்' போர் விமானங்களைப் பாகிஸ்தான் விமானப் படை பெற்றிருக்கிறது"

என்று 'வாஷிங்டன் போஸ்ட்' இதழின் இஸ்லாமாபாத் நிருபர் தெரிவித்தார்.

அந்த விமானங்கள் ஏற்கனவே பாகிஸ்தான் படைப் பிரிவில் இருக்கின்றன ; இந்தியாவுடன் மீண்டும் போர் நடந்தால் அவை பாகிஸ்தானுக்குப் பயன்படும்.

சட்டப் பேரவை ஒத்திவைப்பு-- ஆளுநர் தலையிட வாய்ப்பு

பஞ்சாபில் நடந்ததைச் சுட்டிக்காட்டி சி. சிட்டிபாபு அறிக்கை

சென்னை, நவ. 14—

நாடாளுமன்ற மக்களவை தி.மு.க. உறுப்பினர் சிட்டிபாபு அறிவிப்பதாவது :—

"ஒரு நாட்டின் சனநாயகம் ஒழுங்காக இயங்குவதற்குச் சட்டமன்ற விதி முறைப்படியும் -- அரசியல் சட்டத்தின்படியும் நடைபெறுதல் வேண்டும் ; இல்லாவிடில், சனநாயக முறைப்படி அரசாங்கத்தை நடத்த இயலாது.

ஆனால், ஆளுங்கட்சிக்கு எதிராக உள்ள அவைத் தலைவர், 'சட்டப் பேரவையை நியாயமான முறையில் அலுவல்களை நடத்திட முடியாமல் செய்யலாம்' என்று கருதி -- சட்டப் பேரவையை நீண்ட காலத்திற்கு ஒத்திவைத்துவிடுவது உண்டு.

இம்மாதிரியான நிகழ்ச்சி ஒன்று பஞ்சாபில் 1968-ம் ஆண்டு நடைபெற்றது ; வரவு-செலவுத் திட்ட விவாதம் சட்டமன்றத்தின் முன்னிலையில் இருக்கும்போது, இரண்டு மாதத்திற்குச் சட்டப் பேரவையை அவைத் தலைவர் ஒத்திவைத்துவிட்டார்.

இந்த நெருக்கடி நிலையைத் தீர்ப்பதற்காக மாநில ஆளுநர், சட்டமன்றக் கூட்டத் தொடரை, அரசியல் சட்டத்தில் தனக்குள்ள அதிகாரத்தின்படி 'புரோரோக்' செய்து -- மீண்டும் சட்டமன்றத்தைக் கூடுமாறு கட்டளை பிறப்பித்தார் ; அந்தக் கட்டளைப்படி, உடனேயே சட்டப் பேரவை கூடி, வரவு-செலவுத் திட்டத்தின் மீது விவாதம் நடத்தி நிறைவேற்றியது.

ஆளுநர் உத்தரவுப்படி, சட்டப் பேரவை கூடிய பின்னும் பேரவை தனது அலுவல்களைத் தொடர்ந்து நடத்த முடியாமல் ஒத்திவைக்கலாம் என்ற நிலையைப் போக்குவதற்கு ஆளுநரே ஓர் அவசரச் சட்டத்தை -- அரசியல் சட்டம் 209-வது பிரிவுப்படி இயற்றினர்.

நிதி நிலை அறிக்கையை விவாதித்த பின்னர்தான் சட்டப் பேரவை ஒத்திவைக்கப்பட வேண்டும் என்றும், இடையில் சட்டப் பேரவை உறுப்பினர்கள் பெரும்பான்மையோர் இசைந்தாலன்றி ஒத்திவைக்கக் கூடாதென்றும் அவசரச் சட்டம் உத்தரவிட்டது ; அதன்படி சட்டப் பேரவை தனது அலுவலைத் தொடர்ந்து நடத்தி வரவு-செலவுத் திட்டத்தை நிறைவேற்றியது.

இது சம்பந்தமான தீர்ப்பில் தலைமை நீதிமன்றம், 'ஆளுநர் அவசரச் சட்டம் பிறப்பித்ததும் -- சட்டப் பேரவையைக் கூட்டியதும் சனநாயக ஆட்சி நிலைபெறுவதற்காக எடுத்துக் கொண்ட நல்லதோர் நடவடிக்கை' என்று பாராட்டித் தீர்ப்பு அளித்தது."

ஆலைகள் மூடப்படுவதற்கு முற்றுப்புள்ளி

மத்திய அமைச்சர் ஏ.சி. ஜார்ஜ் தகவல்

சென்னை, நவ. 14—

"நலிந்த நிலையில் உள்ள பஞ்சாலைகளை அரசாங்கம் எடுத்துக் கொள்வதால் எவ்வளவு நிகர இலாபம் ஈட்ட முடியும் என்று பார்ப்பதை விட, இந்த நடவடிக்கையால் உடனடியாக எவ்வளவு பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்க முடியும் -- எந்த அளவுக்கு உற்பத்தியைப் பெருக்க முடியும் என்று பார்க்கவேண்டும்"

என்று, மத்திய வெளிவர்த்தகத் துணையமைச்சர் ஏ. சி. ஜார்ஜ், நிருபர்களிடையே பேசுகையில கூறினர் ; அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"இனிமேல் எந்த ஆலை உரிமையாளரும் ஆதாரமற்ற கோரிக்கைகளின்மீது ஆலைகளை மூட முற்படமாட்டார் ; அவ்வாறு மூடினால் அரசாங்கம் அத்தகைய ஆலைகளை உடனடியாக எடுத்துக் கொள்ளும்.

அதேபோல், இனிமேல் ஆலை உரிமையாளர்கள் ஆலைகளை மூடுவதாக மாநில அரசுகளைப் பயமுறுத்திப் பணம் பெற முற்பட மாட்டார்கள்.

அரசாங்கம் ஏற்கனவே எடுத்துக் கொண்டுள்ள 57 பஞ்சாலைகளில் 12,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது ; ரூ. 185 கோடிக்கு உற்பத்தி ஆகியிருக்கிறது ; ரூ. 23 கோடி வருமானம் கிடைத்திருக்கிறது.

அரசாங்கம் புதிதாக 46 நலிந்த பஞ்சாலைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது ; இவற்றில் மேற்கொண்டு 90,000 பேர்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும் ; ரூ. 150 கோடிக்கு உற்பத்தி ஆகும் ; கணிசமான அளவு ஏற்றுமதிக்கும் இவை உதவும்.

தமிழ்நாட்டிலும் -- கேரளத்திலும் அரசாங்கம் எடுத்துக்கொண்டுள்ள பஞ்சாலைகளில் பெரும்பாலனவை இலாப நிலையிலோ அல்லது இழப்பு இல்லாத நிலையிலோ இயங்கிக் கொண்டிருந்தவைகளாகும்.

1973-72-ல் தேசியப் பஞ்சாலைக் கார்ப்பரேஷனுக்கு ரூ. 30 இலட்சம் நிகர இலாபம் கிடைத்தது.

தமிழ்நாட்டில் எடுத்துக்கொள்ளப்படும் ஏழு பஞ்சாலைகளில் மூன்று பஞ்சாலைகள் கலைப்பு நடவடிக்கைகளில் இருந்தவைகளாகும் ; இந்த ஏழு பஞ்சாலைகளிலும் மொத்தம் சுமார் 2 இலட்சம் தறிகள் இருக்கின்றன ; இவற்றில் 7,175 பேர் பணியாற்றுகின்றனர்.

இவற்றில் கம்போடியா ஆலை—ரங்க விலாஸ் ஆலை ஆகியவை ஏற்கனவே இலாபம் ஈட்டியிருக்கின்றன ; முருகன் ஆலை—கிருஷ்ணவேணி ஆலைகளும் நட்டமில்லாத நிலையை அடைந்துள்ளன."

பிற்பட்ட மக்கள் நலனில் மா. இராசாங்கம் காட்டிய ஆர்வம்

—★—

நாடாளுமன்றத்தில் இந்திரா காந்தி புகழாரம்

புதுடில்லி, நவ. 14—

நாடாளுமன்ற தி. மு. க. உறுப்பினர் தோழர் எம். இராசாங்கம் மறைவுக்கு நாடாளுமன்றத்தில் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

மறைவெய்திய நாடாளுமன்றத்தின் பழைய உறுப்பினர் நால்வருக்கும் தற்போதைய உறுப்பினர் நால்வருக்கும், அகாலி தளத் தலைவர் சாந்த் பதே சிங்குக்கும் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

"இராஜாங்கம் பிற்பட்டோர் நலனுக்காகவும், வேளாண்மை மேம்பாட்டுக்காகவும் உழைப்பதில் ஆழ்ந்த ஈடுபாடு காட்டினர்"

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி குறிப்பிட்டார்.

மக்களவைத் தலைவர் தில்லான் பேசுகையில், பிற்பட்டோர் மேம்பாடு அடைய வேண்டுமென்பதில் இராசாங்கம் கொண்டிருந்த ஆர்வத்தைப் பாராட்டினர்.

அவையோர் அனைவரும் இரண்டு நிமிட நேரம் மவுனமாக எழுந்து நின்று அஞ்சலி செலுத்தினர்.

தமிழகத்தின் சரித்திரம் காணாத இராஜ தந்திரி

சென்னை, நவ. 18—

"இன்றுள்ள சில்லறைச் சிக்கல்களில், மாநில சுயாட்சிக் கொள்கையை நாம் மறந்துவிடக்கூடாது !

சிலரைத் தூண்டிவிடுவதன் மூலம் -- ஒரு வருமான வரித் துறை அதிகாரி மாநில அரசை மாற்றிவிட முடியுமென்றால், அந்த மானங்கெட்ட அரசியல் சட்டம் எதற்காக -- என்று மக்கள் கேட்கமாட்டார்களா ?

தமிழகத்தின் சரித்திரம் காணாத இராஜ தந்திரியாக இருக்கிறார் -- முதலமைச்சர் கலைஞர் ; தன்னுடைய எழுத்தை -- பிறப்பை -- படிப்பை இகழ்கின்றவர்களைக் காணும்போதும், இவ்வளவு அமைதியாக இருப்பவரை நான் என் வாழ்நாளில் கண்டதில்லை !

எதிர்ப்பு வளர வளர, கழக அரசின் ஆயுள் வளர்ந்து கொண்டு செல்கிறது !"

—ம. பொ. சிவஞானம்

(என். வி. என். மணி விழாவில்)

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டம்

15--11--72

சென்னை 6-வது வட்டம்

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு நாராயணப்ப நாயக்கன் தோட்டம் 8-வது சந்தில் ; தலைவர் : மு. இராமையா ; பேசுவோர் : தந்தை பெரியார், கி. வீரமணி, வி. கிருஷ்ணமூர்த்தி எம்.எல்.ஏ., காதர்சா என்னும் வெள்ளைச்சாமி எம்.எல்.ஏ., மு. வேதாசலம் எம்.எல்.ஏ., பி.ஏ. என். இராசரத்தினம், சே. எம். கண்ணபிரான் எம்.சி., எம்.எஸ். மணி, எஸ். எஸ். மகாலிங்கம், ஏ. குப்புசாமி.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும் கொண்டு [illegible] இதழ் வெளியிடப்படுகிறது.